தினமணி

**உணவுப் பாதுகாப்புச் சட்டம்: சோனியாவுடன் அமைச்சர் ஆலோசனை**

First Published : 09 Oct 2011 02:30:48 AM IST

புது தில்லி, அக். 8: உணவு மசோதா குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் மத்திய அமைச்சர் கே.வி. தாமஸ், சனிக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

உடல் நலக் குறைவு காரணமாக சோனியா காந்தி அமெரிக்காவில் சிகிச்சை பெற்று திரும்பிய பிறகு தாமஸ் சந்தித்து பேசியிருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மத்திய உணவுத் துறை இணையமைச்சராக தனிப்பொறுப்பு வகிக்கும் தாமஸ், அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்களின் கருத்துகளை அறிந்துகொள்ளும் வகையில் உணவுப் பாதுகாப்புச் சட்ட முன்வரைவு அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சோனியாவிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சட்டத்தின்படி, தனியார் பங்களிப்புடன் உணவுப் பொருள்களை அதிகளவில் சேமித்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்காக தனியார் கிடங்குகள் குத்தகைக்கு எடுக்கப்படும். வடகிழக்கு மாநிலங்கள் உள்ளிட்ட தொலைதூரப் பகுதிகளுக்கும் தடையின்றி உணவு விநியோகிக்கப்படும்.

உணவுப் பொருள்களை வீணாக்காமல் இருப்பது தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

கிராமப்புறத்தில் 75 சதவிகித மானியத்திலும், நகர்ப்புறத்தில் 50 சதவிகித மானியத்திலும் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்படும் என கே.வி. தாமஸ் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை தனது தேர்தல் வாக்குறுதியாக 2009-ல் காங்கிரஸ் கட்சி அறிவித்திருந்தது. இதனால், இந்தச் சட்டத்தை நிறைவேற்ற சோனியா காந்தி அதிக முக்கியத்துவம் தருவதாகக் கூறப்படுகிறது.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் முன்னுரிமைப் பிரிவினர் (வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளோர்), பொதுப் பிரிவினர் (வறுமைக் கோட்டுக்கு மேலுள்ளோர்) ஆகிய இரு பிரிவுகளின் கீழ் பயனாளிகளைக் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

**புரட்டாசி மாதம் எதிரொலி: பூண்டு விலை கிடு. கிடு.**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2011,00:08 IST

ஈரோடு: புரட்டாசி மாதத்தை முன்னிட்டு ஈரோட்டில் பூண்டு விலை கிலோவுக்கு 10 முதல் 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.வடமாநிலங்களான மத்தியபிரதேசம், ராஜஸ்தான் மற்றும் தமிழகத்தில் ஊட்டி, மேட்டுபாளையம் பகுதியில் அதிக பரப்பளவில் விவசாயிகள் மலைப்பூண்டு, நாட்டுப்பூண்டு சாகுபடி செய்கின்றனர். இங்கு அறுவடை செய்து மாநிலம் முழுவதும் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.நடப்பாண்டு வடமாநிலங்களில் பலத்த மழையால் பூண்டு விளைச்சல் குறைந்து, வரத்தும் குறைந்துள்ளது. எனினும், சென்றாண்டு பூண்டு வரத்து அதிகரிப்பு காரணமாக, முன்கூட்டியே வியாபாரிகள், பூண்டு ஏஜன்டுகள் குடோன்களில் இருப்பு வைக்க துவங்கினர்.தற்போது, வரத்து குறைந்த நிலையிலும், தட்டுப்பாடு இல்லாமல் இருப்பில் வைக்கப்பட்ட பூண்டுகளை விற்பனை செய்து வருகின்றனர். இதனால், மலைப்பூண்டு, நாட்டுப்பூண்டு கிலோ 70 முதல் 90 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.புரட்டாசி மாதம் எதிரொலியால் பூண்டு விற்பனை சூடுபிடித்துள்ளது. வரத்து குறைவு, தேவை மற்றும் விற்பனை அதிகரிப்பால், விலையும் கிலோவுக்கு 10 முதல் 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளதால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பூண்டு வியாபாரி கூறியதாவது: வடமாநிலங்களில் இருந்தும், தமிழகத்தில் ஊட்டி, மேட்டுபாளையம் பகுதியில் இருந்து மலைப்பூண்டு, நாட்டுப்பூண்டு ஈரோடுக்கு வரத்தாகிறது. தற்போது, விளைச்சல் குறைவால் வாரத்துக்கு 2 லாரியில் வரத்தாகிறது.கடந்த சில நாட்களாக பூண்டு விலை அதிகபட்சம் 90 ரூபாய்க்கு விற்கப்பட்டது. புரட்டாசி துவக்கத்தில் இருந்து பூண்டு விற்பனை அதிகரித்துள்ளதால், விலையும் கிலோவுக்கு 10 முதல் 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. 100 ரூபாய்க்கு விற்ற மலைப்பூண்டு, கிலோ 120 ரூபாய்க்கும், 80 ரூபாய்க்கு விற்ற நாட்டுப் பூண்டு, கிலோ தரத்தின் அடிப்படையில் 90 முதல் 110 ரூபாய் வரை விற்பனையாகிறது. தீபாவளி பண்டிகை துவங்க இருப்பதால், விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**டி.ஏ.பி., உரம் ரூ.180 விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2011,00:07 IST

கோபிசெட்டிபாளையம்: டி.ஏ.பி., உரத்தின் விலை நேற்று முதல் மூட்டைக்கு 180 ரூபாய் உயர்ந்ததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.தமிழகத்தில் டெல்டா பாசனம் மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர் என 11 மாவட்டங்களில் 16.5 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. பவானிசாகர் அணை மூலம் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதிகள், எல்.பி.பி., வாய்க்கால், காலிங்கராயன் பாசனங்கள் மூலம் 1.50 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, மானாவாரி பயிர்கள், பயறு வகைகள் என ஆண்டுக்கு இருபோகம் சாகுபடியாகிறது.

இப்பகுதி மண் அமைப்புக்கு ஏற்ப தழை, மணி, சாம்பல் சத்துகள் அடங்கிய என்.பி.கே., உரம், யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், டி.ஏ.பி., மற்றும் சல்பேட் போன்ற உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.கடந்த ஏப்ரல் மாதத்து முன்பு வரை உர மானியத்திட்டத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரம் வழங்கப்பட்டது. உரத்தின் உற்பத்தி விலை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் விலையை அரசு மானியமாக வழங்கியது. சென்ற ஏப்ரல் மாதம் முதல் கூடுதல் விலையை விவசாயிகளே கொடுக்க வேண்டும் என மத்திய அரசு தெரிவித்தது.

இதனால், உரத்தின் விலை பல மடங்கு உயர துவங்கியது.கடந்த ஏப்ரலில் டி.ஏ.பி., 480 ரூபாய், 20:20 கலப்பு உரம் 420 ரூபாய், பொட்டாஷ் 262 ரூபாய், யூரியா 276 ரூபாய், சூப்பர் பாஸ்பேட் 280 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. "டி கன்ட்ரோல்' முறை அமலானதால், உரம் மூட்டைக்கு 150 முதல் 300 ரூபாய் வரை உயர்ந்தது. உரங்களில் விலை மீண்டும் மூட்டைக்கு 180 ரூபாய் உயர்ந்துள்ளது.தற்போதைய எம்.ஆர்.பி., விலைப்படி டி.ஏ.பி., 909, 20:20 கலப்பு உரம் 737 ரூபாய், பொட்டாஷ் 550 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. யூரியா, சூப்பர் பாஸ்பேட் உரங்களுக்கு டி கன்ட்ரோல் முறை அமலாகாததால் இவற்றின் விலை உயரவில்லை.கோபி விவசாயிகள், ""தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் டி.ஏ.பி., பொட்டாஷ் உரங்கள் 2 மூட்டைதான் தருகின்றனர். தேவையான உரம் கிடைப்பதில்லை.கடந்த ஏப்ரல் முதல் டி கன்ட்ரோல் முறை அமலானதால் டி.ஏ.பி., பொட்டாஷ், கலப்பு உரம் விலை, மூடைக்கு 180 ரூபாய் வரை உயர்ந்துள்ளதால் விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. உரத்தின் விலையை கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**குவிண்டால் நெல்லுக்கு ரூ.10 மட்டும் கூடுதல் விலை நிர்ணயம் : மத்திய அரசுக்கு கண்டனம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2011,00:46 IST

தூத்துக்குடி : உள்ளாட்சி தேர்தலில் அதிமுக., வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிப்போம் என்று நாம் தமிழர் கட்சியினர் அறிவித்துள்ளனர். நாம் தமிழர் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் பிரபு கூறியதாவது; கடந்த 5 ஆண்டுகளாக தமிழக மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. அதிமுக., அரசு பொறுப்பேற்ற பின்பு ஒன்னரை லட்சம் தமிழர்களை படுகொலை செய்த ராஜபக்சேவை போர் குற்றவாளியாக அறிவித்தும், இலங்கையின் மீது பொருளாதார தடை விதிக்கவும், ராஜீவ் கொலை வழக்கில் நிரபராதிகளான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யக்கோரியும் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள கூடன்குளம் அணுஉலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தியும், இலங்கையால் பாதிக்கப்படும் தமிழ மீனவர்களின் நலனை பாதுகாக்க மத்திய அரசை தமிழக அரசு நிர்பந்தித்தும் வருகிறது.

இது தமிழர்களுக்கு உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. எனவே அதிமுக., அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நாம் தமிழர் கட்சி நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் அதிமுக.,விற்கு ஆதரவு அளிக்க முடிவு செய்துள்ளது. இதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரின் வெற்றிக்கு நாம் தமிழர் கட்சியினர், தமிழின உணர்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பாடுபட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். அப்போது மாவட்ட தலைவர் இசக்கித்துரை, செயலாளர் ஜெயசீலன், நிர்வாகிகள் சேகர், பாலா, ரசுகீன், இளையவன், வடிவேல்முருகன், பாக்கியராஜ், குகன், மாரிமுத்து, சாண்குணதுரை உடன் இருந்தனர்.

**கரும்பு பயிரில் சோகை உரிப்பதின் பலன்கள்வேளாண் துணை இயக்குநர் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2011,02:30 IST

தூத்துக்குடி:கரும்பு பயிரில் சோகை உரிப்பதின் பலன்கள் மற்றும் கரும்பு கத்தியை பயன்படுத்தி காய்ந்த சோகைகளை உரித்து ஆதாயம் பெறுவது குறித்து வேளாண் விஞ்ஞானி ஆலோசனை வழங்கியுள்ளார்.கரும்பு பயிரின் இலை அல்லது சோகை ஒரு தொழிற்சாலை போல் செயல்பட்டு மாவுச்சத்தை தயாரிக்கிறது. ஆனால் வயதான பழுப்பு ஏறிய இலைகளால் ஒளிச்சேர்க்கை செய்ய

இயலாது. இவை கரும்பில் சேகரிக்கப்பட்டுள்ள சத்துக்களை சுவாசம் மூலம் குறைப்பதுடன் தனிக்கரும்பின் எடையினையும் அதிலுள்ள சர்க்கரைச் சத்தின் அளவினையும் குறைத்து விடுகின்றன. எனவே கரும்பில் சோகை உரிப்பது மிகவும் அவசியம். சோகை உரிப்பதின் பலன்கள்: கரும்புத்தண்டில் உள்ள பருக்கள் முளைப்பதில்லை. தண்டிலுள்ள வேர்களும் வளர்வதில்லை. இதனால் கரும்பின் தரம் மற்றும் எடை அதிகரிக்கிறது. பூச்சித்தாக்குதல் குறிப்பாக இடைக்கணுப்புழுக்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் சேதம் குறைகிறது. சோகை உரித்த வயலினுள் சென்று நீர் பாய்ச்சுவதும் பயிர் பாதுகாப்பு மேற்கொள்வதும் எளிதாகிறது.

எலித் தொல்லைகள் வெகுவாகக் குறையும். காற்றோட்ட வசதி அதிகம் ஏற்படுவதால் கரும்பின் வளர்ச்சி மற்றும் தண்டின் பெருக்கம் அதிகரிக்கிறது. உரிக்கப்பட்ட சோகைகள் சாலின் மீது போர்வை போன்று இருந்து நீர் எளிதில் ஆவியாகாமல் செய்கிறது. உரிக்கப்பட்ட சோகைகள் நிலத்தில் மக்குவதால் மண் வளம் அதிகரிக்கிறது. கரும்பு அறுவடை எளிதாகிறது. கரும்பு மகசூல் ஏக்கருக்கு நான்கு டன்களும் சர்க்கரை கண்டு முதல் அரை சதமும் அதிகரிக்கிறது. சர்க்கரை சத்து அதிகமிருப்பதால் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. இவ்வாறு பலன்கள் இருந்தும் கூலி ஆட்கள் பற்றாக்குறையாலும், கரும்பின் சுணையும், ரம்பம் போன்ற இலை விளிம்புகளும் ஆட்களின் கையில் சோகை உரிக்கும்போது ரணத்தையும் வலியையும் உண்டாக்குவதாலும் மிகக்குறைந்த அளவிலேயே விவசாயிகள் இதனை செய்து வருகின்றனர். இப்பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் வடிவமைக்கப்பட்ட எளிய பண்ணைக்கருவி தான் கரும்புக்கத்தியாகும். இக்கருவியினைப் பயன்படுத்தி சோகை உரிக்கும் ஆட்கள் சோகை மீது கை வைக்காமலேயே சோகையை எளிதில், சுலபமாக உரித்து விடலாம்.

ஒரு கரும்பில் உள்ள சோகைகளை மேலிருந்து கீழ் நோக்கி கத்தி வைத்து இழுக்க கரும்புத் தண்டில் எவ்வித காயமும் இன்றி குறைந்த காலத்தில் உரித்து விடலாம். சோகைகளை 5 மற்றும் 7வது மாதங்களில் இருமுறை உரிக்க வேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆட்கள் போதுமானது. எனவே தூத்துக்குடி மாவட்டத்தில் கரும்பு சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் கரும்புக் கத்தியினைப் பயன்படுத்தி காய்ந்த சோகைகளை உரித்து பண ஆதாயம் அடைவதுடன் மண் வளத்தினையும் மேம்படுத்திடலாம் என தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளின் வசதிக்காக கட்டப்பட்ட நெற்களம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2011,23:14 IST

விவசாயிகளின் வசதிக்காகக் கட்டப்பட்ட நெற்களம், பராமரிப்பின்றி உள்ளதால், கம்பு, கேழ்வரகு போன்ற அறுவடைப் பயிர்களை, மாநில நெடுஞ்சாலையில் போட்டு, உணவு தானியங்களைப் பிரித்தெடுக்கின்றனர். இதனால், சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள், விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது.விவசாயத்துக்குத் தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் உரம் போன்றவை, அரசு சார்பில் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. நெல், கம்பு, கேழ்வரகு போன்றவை, சாகுபடி செய்ய கூலியாட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது.இதுபோன்ற தானியங்களைப் பிரித்தெடுக்க, மத்திய அரசின் "ஸ்வர்ண ஜயந்தி கிராம சம்ரிஹிதி யோஜனா' திட்டத்தின் கீழ், ஏழு ஆண்டுகளுக்கு முன், விவசாயிகளுக்கு நெற்களம் அமைத்துத் தரப்பட்டது. வ்வொன்றும், 40 ஆயிரம் ரூபாய் முதல் 85 ஆயிரம் ரூபாய் வரையிலான மதிப்பீட்டில் கட்டப்பட்டது.திருவள்ளூர் மாவட்டத்தில், 14 ஒன்றியங்களில், 539 நெற்களங்கள் 2000ம் ஆண்டு முதல் 2004ம் ஆண்டு வரை அமைக்கப்பட்டன. அவற்றில், பல தற்போது பராமரிப்பின்றி பயனற்ற நிலையில் உள்ளன.

எனவே, சாகுபடி செய்த தானியங்களை, தார்ச் சாலைகளில் விவசாயிகள் உலர வைக்கின்றனர். அவ்வழியாகச் செல்லும் வாகனங்களின் டயர்களில் அழுத்தப்படுவதன் மூலம், தானியங்கள் பிரிந்து விடுகின்றன.விபத்து அபாயம்: தானியங்கள் சாலையில் கிடக்கும் போது, அதில் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் வழுக்கி விழுந்து, விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. அதிக அளவில், திருத்தணி, ஆர்.கே.பேட்டை மற்றும் பள்ளிப்பட்டு பகுதியில் உள்ள நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள், நெற்களமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாய சங்க மாவட்ட துணைத் தலைவர் வாசு கூறும் போது, ""கிராமங்களில், குறைந்த அளவே நெற்களங்கள் உள்ளன. அவையும், விவசாயிகளுக்குப் பயனற்ற நிலையில் உள்ளன. பயிரிடப்படும் இடத்தில் இருந்து, வெகு தூரத்தில் நெற்களம் இருப்பதால், அருகில் உள்ள தார்ச் சாலைகளை நெற்களமாக விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். விவசாயிகளிடம் கலந்து ஆலோசிக்காமல், ஒப்பந்ததாரர்களின் விருப்பத்திற்கு ஏற்ப, தரமற்ற முறையில் நெற்களங்கள் அமைக்கப்பட்டதே இதற்குக் காரணம்'' என்றார்.இது குறித்து, நெடுஞ்சாலைத் துறை உதவி இயக்குனர் (பள்ளிப்பட்டு) சுகுமாரிடம் கேட்டபோது, ""சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு கருதி, சாலையை நெற்களமாகப் பயன்படுத்தக் கூடாது என, விவசாயிகளுக்கு அறிவிப்பு கொடுத்து, தீவிரமாக கண்காணிக்கப்படும்.

அதை மீறும் பட்சத்தில், சாலையில் உள்ள தானியங்கள் பறிமுதல் செய்யப்படும்'' என்றார்.இது குறித்து, மாவட்ட திட்ட அலுவலக அதிகாரி ஒருவர் கூறும் போது, ""மத்திய அரசின் "ஸ்வர்ண ஜயந்தி கிராம சம்ரிதி யோஜனா' திட்டத்தின் கீழ், 2000 - 04 ஆண்டுகளில், கிராமங்களில் ஊராட்சிக்கு ஒன்று என்ற அடிப்படையில், நெற்களம் அமைக்கப்பட்டது. தற்போது, இத்திட்டம் செயல்பாட்டில் இல்லை. விவசாயிகள் கோரிக்கை வைத்தால், அரசு அதை ஏற்றுக் கொண்டு, இனி வரும் காலங்களில், நெற்களம் அமைக்க முன் வரலாம்'' என்றார்.

**வெள்ளாடுகளை தாக்கும் நோய் தடுப்புப் பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2011,00:46 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 11ம் தேதி, வெள்ளாடுகளை தாக்கும் நோய்களும், அதை தடுக்கும் முறை குறித்து, ஒரு நாள் இலவசப் பயிற்சி நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 11ம் தேதி, வெள்ளாடுகளைத் தாக்கும் நோய்களும், அதைத் தடுக்கும் முறைகளும் குறித்த, ஒரு நாள் இலவசப் பயிற்சி நடக்க உள்ளது. பயிற்சியில், வெள்ளாட்டினங்கள், அவற்றை தேர்வு செய்யும் முறை, கொட்டகை அமைக்கும் முறைகள், தீவன மேலாண்மை, வெள்ளாடுகளை தாக்கும் பல்வேறு நோய்கள், அதைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து கற்றுத்தரப்படும். பயிற்சியில், விவசாயிகள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் பங்கேற்கலாம். விருப்பமுள்ளோர், வரும் 10ம் தேதிக்குள், மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது, 04286-266345, 266244, 266650 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெற்றிலை நோய் தடுப்பு சிறப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2011,00:51 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் வெற்றிலை பயிரில் ஏற்படும் நோய் தடுப்பு குறித்து தோட்டக்கலை துறை சார்பில் தர்மபுரி அடுத்த மொடக்கேரியில் நடந்தது.தோட்டக்கலை உதவி இயக்குனர் சுசீலா தலைமை வகித்தார். பாப்பாரப்பட்டி வேளாண் துறை அறிவியல் மைய நோயியல் வல்லுனர் சண்முகம், தோட்டக்கலை துணை இயக்குனர் கலைசெல்வி, உதவி இயக்குனர் முருகன், உதவி இயக்குனர் சுசீலா ஆகியோர் வெற்றிலை தோட்டதுக்கு வரும் பூச்சி

நோய்கள் பாதிப்பு, தடுப்பு குறித்த வழிமுறைகளை கூறி விளக்கினர்.ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் துரைராஜ், செல்வம் ஆகியோர் செய்திருந்தனர்.

**வட கிழக்கு பருவமழை எப்போது சாகுபடிக்காக காத்திருக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2011,01:37 IST

மதுரை : மதுரை மாவட்டத்தில் நெல் சாகுபடி பணிக்காக வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். தமிழகத்தில் ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை அக்., 20ம் தேதியில் துவங்கும். இதையடுத்து சம்பா சாகுபடி துவங்கும். மதுரை மாவட்டத்தில் முதல்போக குறுவை சாகுபடியை விட, இரண்டாவதாக நடக்கும் சம்பா சாகுபடியில், கூடுதல் இடங்களில் நெல் பயிரிடுவர். ஏறக்குறைய 1.50 லட்சம் ஏக்கர் நிலம், நெல் சாகுபடிக்கு தயாராகும்.

தற்போது தென்மேற்கு பருவமழை தொடருகிறது. வடகிழக்கு பருவமழை துவங்க இன்னும் சில நாட்கள் உள்ளன. கடந்தாண்டு இதே நாட்களில் நல்ல மழை பெய்தது. ஆனால் தற்போது ஒருநாள் விட்டு பெய்கிறது. மழையும், மதுரை நகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மட்டும் பெய்கிறது. மதுரையில் நேற்று முன்தினம் 10 மி.மீ., பெய்தது. ஆனால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை அதிகம் இல்லை.

இதனால் பல கண்மாய்களில் தண்ணீர் இல்லை. தற்போது அணை நீர்மட்டம் பெரியாறில் 115 அடி, வைகையில் 50 அடியாக உள்ளது. இரு அணைகளுக்கும் நீர்வரத்து 317 கனஅடியாக உள்ளது. இந்நிலையில் சம்பா விவசாய பணிகளுக்கு அதிகளவு தண்ணீர் கிடைத்தால் நல்லது என விவசாயிகள் கருதுகின்றனர். நாற்றங்கால் தயாரிக்கவும், திருந்திய நெல்சாகுபடியால் விரைவாக நடுவதற்கு தயாராகும் விவசாயிகளுக்கு 15 முதல் 20 நாட்களுக்குப்பின், நாற்றுகளை நடுவதற்கும் அதிக தண்ணீர் தேவைப்படும்.

அதற்கேற்ப கண்மாய்களில் தண்ணீர் இருப்பு இருக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பெரியாறு பிரதான கால்வாய் பாசன பகுதிகளில் தண்ணீர் பிரச்னை இருக்காது. அதேசமயம் ஒருபோக சாகுபடி இடங்களுக்கும், மானாவாரி பகுதிகளுக்கும் அதிக தண்ணீர் தேவை இருக்கும். இதற்கு வடகிழக்கு பருவமழை தான் தீர்வு. எனவே இம்மழையை நம்பி, அதிக ஆர்வமுடன் பணிகளை துவக்க விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

**மழை இல்லாததால் தரிசாகும் விளை நிலங்கள்எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் உர விலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2011,01:41 IST

திருநெல்வேலி:மழை இல்லாததால் விவசாய விளை நிலங்கள் தரிசாக மாறி வருகின்றனர். உர விலையும் அதிகமானதோடு கடும் தட்டுப்பாடும் நிலவுவதால் விவசாயிகள் பரிதாபத்துடன் காணப்படுகின்றனர்.தமிழகத்தில் பருவ மழை போதுமான அளவில் பெய்யாத காரணத்தினால் விவசாய விளை நிலங்கள் வானம் பார்த்த பூமியாய் தரிசாகவே காணப்படுகின்றன. அணைகளில் நீர் இல்லாத காரணத்தினால் குடிநீருக்கு கூட மக்கள் திண்டாடி வருகின்றனர்.

இதே நிலை நீடித்தால் அனைத்து பகுதிகளிலும் வரலாறு காணாத வகையில் வறட்சி ஏற்படும் சூழ்நிலை வெகு தூரத்தில் இல்லை. இதில் குறிப்பாக, தென் மாவட்டப் பகுதிகளில் போதுமான மழை பெய்யாததால் லட்சக்கணக்கான ஏக்கர் பரப்பில் விவசாய விளை நிலங்கள் தரிசாகவே காணப்படுகிறது.ஆறுகள், குளங்கள், கிணறுகளில் தண்ணீர் இல்லாத சூழ்நிலையில் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது.

ஒருபுறம் தண்ணீர் இல்லாத சூழ்நிலை மற்றும் விவசாய இடுபொருட்களின் விலை ஏற்றம், விளைபொருட்களுக்கு ஏற்ற விலை இல்லாதது, போதுமான தொழிலாளர்கள் கிடைக்காத சூழ்நிலை உட்பட பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக விவசாயிகள் பரிதாப நிலையில் புலம்பி வருகின்றனர்.

இதில் விவசாய இடுபொருட்களை பொறுத்தவரை உரங்கள் போதுமான அளவில் கிடைக்காத சூழ்நிலையில் விவசாய பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு 50 கிலோ மூடை டி.ஏ.பி 486 ரூபாய்க்கு விற்றது. ஆனால் தற்போது இந்த விலை 909 ரூபாயை எட்டியுள்ளது. என்.பி.கே காம்பளக்ஸ் உரம் 327 ரூபாயில் இருந்து 737 ரூபாயாக உள்ளது.பொட்டாஷ் உரம் 231 ரூபாயில் இருந்து 565 ரூபாயாக உயர்ந்துள்ளதாக உர வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த கடுமையான விலை உயர்வு ஒருபுறமிருக்க, இந்த விலை கொடுக்க ஒரு சில விவசாயிகள் தயாராக இருந்தும் கடுமையான உரம் தட்டுப்பாடு நிலவுவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளின் காரணமாக வெளிநாடுகளில் இருந்து உரம் இறக்குமதி செய்வதில் பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்படுவதால் உரத் தட்டுப்பாடும், அதிக விலை ஏற்றமும் உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். சர்வதேச சந்தையில் விலை

அதிகம் ஒருபுறம், உரத்திற்கு போதுமான மானியம் அளிக்காத சூழ்நிலை போன்றவற்றினால் போதிய அளவில் உரங்களை இறக்குமதி செய்வதில் பிரச்னை நிலவுகிறது.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும் உரங்கள் ஒதுக்கீட்டில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டு வருகிறது. இதனை அதிகாரிகளும் கண்டு கொள்ளாத காரணத்தினால் பரவலாக அனைத்து பகுதிகளிலும் உரத் தட்டுப்பாடு நீடிக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனைத்து பகுதிகளுக்கும் உரங்கள் கிடைக்கும் வகையில் கடைகளுக்கு உரங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதனை அதிகாரிகள் முறையாக கண்காணிக்க வேண்டும்.

உரங்களுக்கு செயற்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதிக விலை உயர்வை ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் விரும்புகின்றனர்.விவசாயிகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் உர வகைகள் கிடைக்கவும், தொடர்ந்து விலை உயர்வை தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே விவசாயிகள் வாழ்வில் வளம் பெறும். இல்லையெனில் வானம் பார்த்த பூமி போல்...விவசாயிகளின் வாழ்வும் தரிசு நிலமாகத்தான் காணப்படும்.

**உலக காபி ஏற்றுமதியில் இந்தியாவுக்கு 4ம் இடம்**

அக்டோபர் 09,2011,01:17



மும்பை:உலகளவில் காபி ஏற்றுமதியில், இந்தியா 4வது இடத்தை பிடித்துள்ளது. சென்ற ஆகஸ்ட் மாதம், இந்தியாவின் காபி ஏற்றுமதி, 3 லட்சத்து, 85 ஆயிரத்து, 265 மூட்டைகளாக (ஒரு மூட்டை-60 கிலோ) உள்ளது. இது, முந்தைய ஜூலை மாதம் 4 லட்சத்து 68 ஆயிரத்து 603 மூட்டைகள் என்ற அளவில் இருந்தது. சர்வதேச அளவில், காபி ஏற்றுமதியில், பிரேசில் முதலிடத்தில் உள்ளது. இந்நாட்டின் காபி ஏற்றுமதி, சென்ற ஆகஸ்ட் மாதம் 28 லட்சத்து 67 ஆயிரத்து 486 மூட்டைகள் என்ற

அளவில் இருந்தது. இரண்டாவது இடத்தில் உள்ள வியட்னாம் 9 லட்சத்து 50 ஆயிரம் காபி மூட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது. பெரு மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்நாடு, சென்ற ஆகஸ்ட் மாதம் 4 லட்சத்து, 50 ஆயிரம் காபி மூட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது. காபி ஏற்றுமதியில் கொலம்பியா, 5ம் இடத்தில் உள்ளது. இந்நாடு, 3 லட்சத்து 83 ஆயிரத்து 618 காபி மூட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது. அடுத்த இடங்களில் இந்தோனேஷியா (3 லட்சத்து 50 ஆயிரம் மூட்டைகள்), உகாண்டா (3லட்சத்து 8 ஆயிரத்து 739), கவுதமாலா (2 லட்சத்து 39 ஆயிரத்து 534), மெக்சிகோ (2 லட்சத்து 15 ஆயிரத்து 247) நாடுகள் உள்ளன. காபி ஏற்றுமதியில் பத்தாவது இடத்தில், ஆப்பிரிக்காவை சேர்ந்த எத்தியோப்பியா உள்ளது. இந்நாடு, சென்ற ஆகஸ்ட் மாதம், 2 லட்சத்து 3 ஆயிரத்து 696 காபி மூட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது. சென்ற ஆகஸ்ட் மாதம் உலக நாடுகள், 72 லட்சத்து 5 ஆயிரத்து 905 காபி மூட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளன. இது, முந்தைய ஜூலை மாதம், 74 லட்சத்து 4 ஆயிரத்து 813 மூட்டைகள் என்ற அளவில் இருந்தது.

தினகரன்

**தேயிலை தூள் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : 10/10/2011 0:16:1



குன்னூர்: குன்னூர் தனியார் ஏல மையத்தில் தேயிலைத்தூள் விலை சரிந்தது. கிலோவுக்கு ரூ.2 குறைந்தது. குன்னூர் தனியார் தேயிலைத்தூள் ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 40வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடந்தது. இதில் மொத்தம் 13.38 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலைரகம் 9.30 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.08

லட்சம் கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் பாகிஸ்தான், ரஷியா உள்ளிட்ட வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர். உள்நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் வந்திருந்தாலும் தரமான தேயிலைத் தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர். இதனால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஸி2 வரை சரிந்ததுடன் 75 சதவீத தேயிலைத் தூள் விற்பனையானது.

---

தினத் தந்தி

## ***நடப்பு ஆண்டு ஏப்ரல் – ஆகஸ்டு மாத காலத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 26% உயர்வு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் (ஏப்ரல்–ஆகஸ்டு) நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 26 சதவீதம் அதிகரித்து ரூ.2,676.18 கோடியிலிருந்து ரூ.3,365.20 கோடியாக உயர்ந்துள்ளது.*

டாலர் மதிப்பில்...

நறுமண பொருள்கள் ஏற்றுமதி டாலர் மதிப்பு அடிப்படையில் 29 சதவீதம் அதிகரித்து 58.12 கோடி டாலரிலிருந்து 75.15 கோடி டாலராக உயர்ந்துள்ளது. அதேசமயம், அளவின் அடிப்படையில் 23 சதவீதம் சரிந்து 2.55 லட்சம் டன்னிலிருந்து 1.95 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

அளவின் அடிப்படையில் சரிந்துள்ள நிலையில், ரூபாய் மற்றும் டாலர் மதிப்பு அடிப்படையில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி வியக்கத்தக்க வகையில், அதிகரித்துள்ளது. இது, இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், இந்திய ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு உயர்ந்துள்ளது. இதனையடுத்து, டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி மிகவும் உயர்ந்துள்ளது.

முதல் ஐந்து மாதங்களில், சிறு ஏலக்காய் ஏற்றுமதி வியக்கத்தக்க வகையில் நான்கு மடங்கிற்கு மேல் அதிகரித்து ரூ.27.99 கோடியிலிருந்து ரூ.129.94 கோடியாகவும், பெரிய ஏலக்காய் ஏற்றுமதி மூன்று மடங்கு அதிகரித்து ரூ.5.19 கோடியிலிருந்து ரூ.19.07 கோடியாகவும் அதிகரித்துள்ளது. இஞ்சி ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.31.19 கோடியிலிருந்து ரூ.82.02 கோடியாக உயர்ந்துள்ளது.

பூண்டு, பெருஞ்சீரகம் மற்றும் தனியா ஆகியவற்றின் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் மிகவும் சரிவடைந்துள்ளது. பூண்டு ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 93 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 90 சதவீதமும் குறைந்துள்ளது.

ரூபாய் மதிப்பில்...

நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில், அளவின் அடிப்படையில் 5 லட்சம் டன்னும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் ரூ.6,500 கோடிக்கும் ஏற்றுமதி மேற்கொள்ள நறுமண பொருள்கள் வாரியம் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இந்த இலக்கை அடைய முடியும் என இவ்வாரியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## நடப்பு நிதி ஆண்டில் 30 லட்சம் டன் அளவு கடல்மீன் பிடிக்க இலக்கு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு நிதி ஆண்டில் 30 லட்சம் டன் அளவிற்கு கடல் மீன்கள் பிடிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.*

*மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் மீன்வளத் துறை செயல்பட்டு வருகிறது. இத்துறை கடலில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கவும், கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியை அதிகரிக்கவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது ஆண்டுக்கு 29.60 லட்சம் டன் அளவிற்கு கடல் மீன்கள் கிடைக்கின்றன. இதனை நடப்பு ஆண்டில் மேலும் 40,000 டன் உயர்த்த மீன்வளத் துறை திட்டமிட்டுள்ளது.*

*நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012), மீன்வளத் துறையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.350 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) இதற்காக மேலும் அதிக நிதி ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இந்தியாவில் 8,118 கிலோ மீட்டர் நீள கடற்கரை உள்ளது. நீண்ட கடற்கரை, காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் அமைப்பதற்கும் மிக சாதகமாக உள்ளது. இந்த நீண்ட கடற்கரைப் பகுதியில் 3,322 மீனவக் குப்பங்கள் உள்ளன. தற்போது, கடலில் கிடைக்கும் மீன்களின் அளவு குறைந்து வருவது குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளன.*